7. உறுப்பினர் திரு. ரகுமானகான்மீது உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் — துணைத் தலைவரவர்களே, விதி 248-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"A matter of privilege must be after after the questions and before the list of the business for the day is entered upon.

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business".

எனவே பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும் போதே இப்பிரச்சினை எழுந்துள்ளது. எனவே, கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் வேண்டும் என்றே தவறான தகவலைத் தந்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் திரும்பத் திரும்ப அது தவறு என எடுத்துச் சொல்லியும் கூட திரு. இரகுமான்கான் தாம் சொன்னதைத் திரும்பப் பெற மாட்டேன் என்று வாதிடுவது இந்த அவை உரிமையை மீறிய செயலாகும். இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நான் எழுப்பிய ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பன்ருட்டி திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் என் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த உரிமைப் பிரச்சினை அனுப்பப்படுவதற்கு முன்பாக வாய்ப்புக் கொடுத்து என்னுடைய கருத்தைக் கேட்பதுதான் சபை விதி. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்கள் என்னை அனுமதித்திருக்கிறார்கள். நான் இங்கே சொல்லியிருக்கக்கூடிய குற்றச்சாட்டுகளிலே மிக முக்கியமான குற்றச்சாட்டு ஒன்று, அசைன்மேன்ட் இல்லாமலே இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது. இரண்டாவது.... (குறுக்கீடு-கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவை எல்லாம் ஏற்கனவே பேசியவை. ஏற்கனவே நீங்கள் உங்கள் கருத்தையும் சொல்லிவிட்டீர்கள். அதையே திரும்பவும் பேச வேண்டாம். "அமைச்சருடைய மாமனார்" என்று நீங்கள் சொன்னீர்கள் தனது மாமனார் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்

சொல்லிவிட்டார்கள். அமைச்சர் சொன்னதை ஏற்றுக் கொண்டு நீங்கள் சொன்னதைத் திரும்பப் பெறுகிறீர்களா? இல்லையா? (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்த தீர்மானத்தை நீங்கள் வாக்கெடுப்பு நடத்தி முடித்து விட்டீர்கள். அதற்குப் பிறகு அவர் எப்படிப் பேச முடியும்? (கூச்சல்-குழப்பம்).

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே நாங்கள் சொல்வதற்கு எங்களுக்கு சான்ஸ் தராமல் ப்ருட்டல் மெஜாரிட்டியின் மூலம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்).

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு மின்துறை அமைச்சர், திரு. ரகுமான்கான் மீது கொண்டு வந்த உரிமை மீறல் தீர்மானத்தை அவை ஏற்று உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெறுகிறது.

8. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் 'சவால்கள், எதிர்ச் சவால்கள்' விடுதல்.

திரு. என். சங்கரய்யா : சார் பாயின்ட் ஆப் ஆர்டர். இதற்கு முன்னாலே, 'சவால்கள் விடுவதும், எதிர் சவால்கள் விடுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது' என்று நீங்களே முன்பு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இப்பொழுது அப்படி நடைபெற்றதே, அதைப்பற்றி தங்களுடைய ரூலிங் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சவால்கள் தேவையில்லை என்றாலும் சில நேரங்களில் தவிர்க்கக் கூட முடியாமல் வந்து விடுகிறது. அதுவுமல்லாமல் இப்போது எழுப்பப்பட்ட பிரச்சினை சவால்கள் கூட அல்ல. உண்மைக்கு மாறான தகவல்களை, தவறு என்று நன்றாகத் தெரிந்தும் கூட, தவறுகளைத் திருத்திக் கொள்ள முன் வராது பிடிவாதம் செய்கிற ஒரே காரணத்தினால் எழுந்ததே தவிர, வேறு பிரச்சினை அல்ல என்பதை மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்தப் பேரவையில் சவால் விடுவது ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்றால், சவால்கள் கூடாது என்று சொன்னால் அதை நீக்க வேண்டும். இல்லாவிட்டால் இதை முன்